**பத்மஸ்ரீ விருதுக்கு விவசாயியின் பெயர் பரிந்துரை**

First Published : 07 Oct 2011 02:20:53 AM IST

புதுச்சேரி, அக். 6: புதுச்சேரி கூடப்பாக்கத்தைச் சேர்ந்த விவசாயி வெங்கடபதி ரெட்டியாரின் பெயரை பத்மஸ்ரீ விருதுக்கு புதுச்சேரி அரசு பரிந்துரை செய்துள்ளது.

புதுச்சேரி துணைநிலை ஆளுநர் இக்பால் சிங் தலைமையில், முதல்வர் ரங்கசாமி உள்ளிட்ட அமைச்சர்கள்

கலந்துகொண்டு நடந்த உயர்நிலைக்குழு, இவருடைய சேவையையும், பங்களிப்பையும் பாராட்டி மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

வெங்கடபதி ரெட்டியார் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பள்ளிப் படிப்பைக் கூட முடிக்காதவர். ஆனால் ஏன்? எதற்கு? என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருப்பார். இதுதான் விவசாயத்தில் அவரை ஆராய்ச்சி செய்யத் தூண்டியது. கனகாம்பரம் பூ செடிகளில் பல்வேறு ரகங்களை உருவாக்கி சாதனை படைத்தவர்.

இதில் விவசாயிகள் வர்த்தக ரீதியாக பணம் சம்பாதிக்கும் வகையில் புதிய ரகங்களை உருவாக்கிக் கொடுத்தார். இப்போது வறண்ட நிலம் உள்பட எல்லா நிலங்களுக்கும் ஏற்ற வகையிலான சவுக்கு ரகங்களை உருவாக்கிக் கொடுத்து வருகிறார். இவரது சவுக்கை நாற்றங்காலில் இருந்து வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்ட ஆந்திரப் பகுதிக்கு நாற்றுகள் சென்று சாகுபடி செய்யப்பட்டுள்ளன. ஆந்திர அரசு அந்த மக்களுக்கு உதவி செய்ய இவரிடம் இருந்து நாற்றுகளை வாங்கிச் சென்றுள்ளது.

பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்கும் விவசாயிகள் சாகுபடியில் லாபம் ஈட்ட வேண்டும் என்பது இவருடைய ஆசை. அதை நிறைவேற்றும் வகையில் இவர் பல்வேறு புதிய ரகங்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறார். இதற்காக பல்வேறு நவீன தொழில்நுட்பங்களையும் கற்றுக் கொண்டு அதைச் செயல்படுத்துகிறார்.

இவருடையச் சேவைக்காக முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், இவரை தில்லிக்கு வரவழைத்து பாராட்டியுள்ளார். இவருடைய ஆராய்ச்சிகளின் வழிமுறைகளும், ஆராய்ச்சிகளின் முடிவுகளும் பல்வேறு பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை.

**தலையங்கம்: தேவை, தரக்கட்டுப்பாடு!**

First Published : 07 Oct 2011 01:58:22 AM IST

உலக அரங்கில் இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்து கொண்டிருந்த தேயிலை, இப்போது அவமானத்தைத் தேடித் தருகிறது என்றால் வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை. கடந்த 150 ஆண்டுகளாக உலக அரங்கில் தேயிலை உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் முதலிடம் வகித்துவரும் இந்தியத் தேயிலை இப்போது சில நாடுகளால் தரத்தின் பெயரால் நிராகரிக்கப்படுகிறது என்றால் அதைவிட அவமானம் என்ன இருக்க முடியும்?

தேயிலைத் தொழிலின் மொத்த விற்று வரவு ஆண்டொன்றுக்கு ரூ. 10,000 கோடி. சுதந்திரத்துக்குப் பிறகு பயிரிடும் நிலப்பரப்பு 40%தான் அதிகரித்திருக்கிறது என்றாலும் உற்பத்தி ஏறத்தாழ 250% அதிகரித்திருக்கிறது என்பது தேயிலை பயிரிடுபவர்களின் சாமர்த்தியத்துக்கும், உழைப்புக்கும் கிடைத்த பலன். கடந்த சில ஆண்டுகளாக நமது தேயிலை ஏற்றுமதியின் மூலம் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணி மட்டும் ஆண்டொன்றுக்கு ரூ. 1,847 கோடி.

இத்துடன் நின்றுவிடவில்லை. ஏறத்தாழ 11 லட்சம் தொழிலாளர்கள் தேயிலைத் தொழிலில் நேரடியாக ஈடுபட்டிருக்கிறார்கள். குறைந்தது ஒரு கோடிக்கும் அதிகமானவர்கள் தேயிலைத் தொழிலின்மூலம் பயனடைந்து வருகிறார்கள். வேடிக்கை என்னவென்றால், தேயிலைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களில் 50%-க்கும் மேலானவர்கள் பெண்கள். இப்படிப்பட்ட ஒரு தொழில், தனது ஏற்றுமதி வாய்ப்பை இழந்து நலிந்துவிடுமானால் அதனால் ஏற்பட இருக்கும் தொடர் இழப்புகள் மிகவும் கடுமையானதாக இருக்கக்கூடும்.

கடந்த சில ஆண்டுகளாகவே, தேயிலை ஏற்றுமதியில் சற்று சுணக்கம் ஏற்பட்டிருப்பது தெளிவாகவே தெரிகிறது. சோவியத் யூனியனின் பிளவுக்கு முன்னால் 200 மில்லியன் கிலோவுக்கும் அதிகமாக இருந்த இந்தியத் தேயிலை ஏற்றுமதி இப்போது அந்த அளவை எட்டிப்பிடிக்க பிரம்மப் பிரயத்தனம் நடத்திக் கொண்டிருக்கிறது. கடந்த நிதியாண்டில் நமது மொத்தத் தேயிலை ஏற்றுமதி 178.9 மில்லியன் கிலோ மட்டுமே.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையைப் பொறுத்தவரை, அவர்களது தர நிர்ணயம் மிகவும் கடுமையாக இருப்பதால் பிரச்னைகள் எழுவதில்லை. தரம் சற்று குறைந்தாலும் அவர்கள் தேயிலையை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது தெரிந்ததால் பெரிய தேயிலைத் தயாரிப்பு நிறுவனங்களும், தரத்தில் குறியாக இருப்பவர்களும் மட்டுமே மேற்கு நாடுகளுக்குத் தேயிலை ஏற்றுமதி செய்து வருகிறார்கள்.

சோவியத் யூனியனின் பிளவுக்குப் பிறகு அந்த நாடுகளில் இந்தியத் தேயிலைக்கான வரவேற்பு சற்று குறைந்துவிட்டிருக்கிறது. அதை ஈடுகட்டும் விதத்தில் கடந்த பத்து ஆண்டுகளாக மேற்காசிய நாடுகள், வட ஆப்பிரிக்க நாடுகள், இராக், ஈரான், பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு இந்தியத் தேயிலை ஏற்றுமதியை அதிகரிக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு ஓரளவுக்கு அதில் நாம் வெற்றியும்

பெற்றிருக்கிறோம். இந்த நிலையில்தான், இந்தியத் தேயிலையின் தரம் குறித்த புகார் எழுந்திருக்கிறது.

ஏப்ரல் மாதம் இராக்குக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட 200 கன்டெய்னர் தேயிலை தரம் குறைந்ததாக இருந்ததால் அந்த நாட்டு இறக்குமதியாளர்களால் நிராகரிக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. இதுபோல, தரம் குறைந்த தேயிலை இந்தியாவால் ஏற்றுமதி செய்யப்படுவதாகப் புகார் எழுந்ததால்தான் இந்த ஆண்டு ஜனவரி - ஏப்ரல் மாதங்களுக்கான தேயிலை ஏற்றுமதி கடந்த ஆண்டைவிட 24% குறைந்துவிட்டது என்று தெரியவந்திருக்கிறது.

தரமான மாதிரிகளைக் காட்டி ஏற்றுமதிக்கான ஒப்பந்தங்களைச் செய்துவிட்டு, தரமற்ற தேயிலையை ஏற்றுமதி செய்பவர்களால் ஏற்பட்டிருக்கும் இந்த அவமரியாதையை சீனா, இலங்கை, மலேசியா போன்ற ஏனைய தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகள் பெரிய அளவில் இந்தியத் தேயிலைக்கு எதிரான பிரசாரமாக மாற்ற முயன்று வருகின்றன. அதனால்தான், தேயிலை ஏற்றுமதி பற்றிய நமது கவலை அதிகரிக்கிறது.

கப்பலில் ஏற்றுமதிக்காகத் தேயிலை ஏற்றப்படுவதற்கு முன்னால் அதன் தரம் பரிசோதிக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கை, ஒரு சில தேயிலைத் தயாரிப்பாளர்களால் எழுப்பப்படுகிறது. தங்களது வியாபாரத்திலும், தயாரிப்பின் தரத்திலும், அரசு மூக்கை நுழைப்பதால் கட்டுப்பாடுகளும் அதைத் தொடர்ந்து ஊழலும் வரக்கூடும் என்று தெரிந்தும், தேயிலை ஏற்றுமதியாளர்கள், தரக் கட்டுப்பாடு கோருகிறார்கள் என்றால், எந்த அளவுக்குத் தயாரிப்பாளர்களும், ஏற்றுமதியாளர்களும் பயந்து போயிருக்கிறார்கள் என்பதைத்தான் அது காட்டுகிறது.

இந்திய டீ போர்டும், தேயிலைத் தொழிலின் பிரதிநிதிகளும் இதுபற்றிய விவாதத்தில் ஈடுபட்டும் சரியான முடிவு எதுவும் ஏற்படவில்லை. குறைந்தபட்சம் இராக், ஈரான், பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதிகளின் தரம் பரிசோதிக்கப்பட வேண்டும் என்றும், தரம் குறைந்த ஏற்றுமதியாளர்கள் தடை செய்யப்பட வேண்டும் என்றும் எழுந்த கோரிக்கை அரசுத் தரப்பால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. காரணம், தடை செய்யப்பட்டவர்கள் வேறு பெயரில் ஏற்றுமதி செய்யக்கூடும் என்பதுதான்.

ஏற்றுமதிக்கு முன் அளிக்கப்பட்ட மாதிரித் தேயிலையும், ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையும் ஒரே தரத்தில்தான் இருக்கின்றனவா என்பதைச் சோதித்துப் பார்க்க பொதுவான ஒரு தர நிர்ணயக் குழுவை அமைக்கலாம் என்கிற தேயிலை ஏற்றுமதியாளர்களின் கோரிக்கை எந்தவித நடவடிக்கையும் இல்லாமல் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது.

கடந்த 150 ஆண்டுகளாக உலக அரங்கில் தேயிலைத் தயாரிப்பிலும், தேயிலை ஏற்றுமதியிலும் முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கம் இந்தியா, தரம்கெட்ட தேயிலையைத் தயாரித்து ஏற்றுமதி செய்கிறது என்கிற அவப்பெயரைச் சம்பாதித்துக் கொண்டுவிடக் கூடாது. அப்படியொரு அவப்பெயர் ஏற்படுமானால், அது இந்தியாவின் ஒட்டுமொத்த

ஏற்றுமதியையும்கூட பாதிக்கக்கூடும். இந்தப் பிரச்னையில் அரசின் தலையீடு அவசியம் மட்டுமல்ல, அவசரமும்கூட!

கோயம்புத்தூர்

**சத்தியில் மல்லிகை கிலோ ரூ.400**

First Published : 05 Oct 2011 01:13:05 PM IST

Last Updated : 05 Oct 2011 01:13:50 PM IST

சத்தியமங்கலம்,அக் 4: சரஸ்வதி பூஜையை முன்னிட்டு சத்தியில் மல்லிகைப் பூ கிலோ ரூ.400க்கு ஏலம் போனது.

÷சத்தியமங்கலத்தை அடுத்துள்ள சிக்கரசம்பாளையம், தாண்டாம்பாளைம், குய்யனூர், பட்டரமங்கலம், புதுவடவள்ளி உள்பட 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் மல்லிகை, முல்லை, கனகாம்பரம் மற்றும் செண்டு மல்லிப் பூக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. பல்வேறு கிராமங்களில் சேகரிக்கப்படும் பூக்கள், சத்தியில் உள்ள மலர்கள் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் வியாபாரிகள் முன்னிலையில் ஏலம் விடப்படும்.

÷கடந்த வாரம் பூக்களின் வரத்து அதிகமாகவும் அதன் தேவைகள் குறைந்தும் இருந்ததால் மல்லி கை கிலோ ரூ.150-க்கு விற்பனையானது. புதன்கிழமை சரஸ்வதி பூஜை என்பதால் செவ்வாய்க்கிழமை பூக்களை வாங்க வியாபாரிகளிடையே கடும் போட்டி நிலவியது.

÷செவ்வாய்க்கிழமை நிலவரப்படி மல்லிகை கிலோ ரூ.400, முல்லை ரூ.250, செண்டுமல்லி ரூ.15 மற்றும் செவ்வந்திப்பூ ரூ.100-க்கு ஏலம் போனது.

---

## நடப்பாண்டு ஆகஸ்ட் மாதத்தில் நாட்டின் தேயிலை உற்பத்தி 3 சதவீதம் உயர்வு

அக்டோபர் 07,2011,02:20



புதுடில்லி:நாட்டின் தேயிலை உற்பத்தி, சென்ற ஆகஸ்ட் மாதத்தில், 3 சதவீதம் உயர்ந்து, 12.70 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. இந்த உற்பத்தி, கடந்த ஆண்டின் இதே மாதத்தில், 12.27 கோடி கிலோவாக இருந்தது.இதே காலத்தில், தேயிலை ஏற்றுமதி 15 சதவீதம் அதிகரித்து, 1.68 கோடி கிலோவிலிருந்து, 1.94 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது என, தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது. நடப்பு 2011ம் ஆண்டின், ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையிலான எட்டு மாத காலத்தில், நாட்டின் தேயிலை உற்பத்தி 6 சதவீதம் அதிகரித்து, 61.86 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே மாதங்களில், 58.49 கோடி கிலோவாக இருந்தது.இருப்பினும், நடப்பாண்டில் ஜனவரி - ஆகஸ்ட் வரையிலான எட்டு மாதங்களில் மேற்கொள்ளப் பட்ட தேயிலை ஏற்றுமதி, கடந்த ஆண்டின் இதே காலத்தை விட, 12 சதவீதம் குறைந்து, 12.41 கோடி கிலோவிலிருந்து, 10.92 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது. சென்ற ஆகஸ்ட் மாதத்தில் நாட்டின் தேயிலை உற்பத்தி அதிகரிப்பிற்கு, அசாம் மாநிலத்தில் இதன் உற்பத்தி சிறப்பான அளவில் உயர்ந்ததே முக்கிய காரணமாகும். இம்மாநிலத்தின் தேயிலை விளைச்சல், 7 சதவீதம் உயர்ந்து, 8.41 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே மாதத்தில், 7.86 கோடி கிலோவாக இருந்தது. இந்தியாவின் மொத்த தேயிலை உற்பத்தியில், அசாம் மாநிலத்தின் பங்களிப்பு 50 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.சென்ற ஆகஸ்ட் மாதத்தில், வட இந்திய மாநிலங்களின் தேயிலை உற்பத்தி 5 சதவீதம் அதிகரித்து, 11.27 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே மாதத்தில், 10.78 கோடி கிலோவாக இருந்தது. எனினும், இதே காலத்தில், தென்னிந்திய மாநிலங்களின் தேயிலை உற்பத்தி, 1.49 கோடி கிலோவிலிருந்து, 1.43 கோடி கிலோவாக குறைந்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தில், தேயிலை ஏற்றுமதி அதிகரிப்பிற்கு, வட இந்திய மற்றும் தென்னிந்திய மாநிலங்களின் ஏற்றுமதி

அதிகரிப்பே முக்கிய காரண மாகும்.இதன்படி, சென்ற மாதத்தில், வட இந்திய மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதி 23 சதவீதம் அதிகரித்து, 1.10 கோடி கிலோவாக உள்ளது. இது, கடந்த 2010ம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில், 89 லட்சம் கிலோவாக இருந்தது. மேலும், இதே காலத்தில், தென்னிந் திய மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதி, 7 சதவீதம் உயர்ந்து, 78 லட்சம் கிலோவிலிருந்து, 84 லட்சம் கிலோவாக அதிகரித் துள்ளது.நடப்பு 2010-11ம் நிதியாண்டின், ஏப்ரல் -ஆகஸ்ட் வரையிலான முதல் ஐந்து மாதங்களில், நாட்டின் தேயிலை ஏற்றுமதி 6.96 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது, கடந்த 2009-10ம் நிதியாண்டின், இதே மாதங்களில், 7.02 கோடி கிலோவாக அதிகரித்து காணப்பட்டது. உலகளவில், இந்தியா, தேயிலை உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும், பயன்பாட்டில் முதலிடத்திலும் உள்ளது.

**மத்திய அர" கட்டுப்பாட்டை விலக்கியதால் ரசாயன உரங்களின் விலை தொடர்ந்து அதிகரிப்பு**

அக்டோபர் 07,2011,02:18



கோபிசெட்டிபாளையம்:உரத்துக்கான, "டி கன்ட்ரோல்' முறையை மத்திய அரசு விலக்கிக் கொண்டதால், ரசாயன உரங்களின் விலை, நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது.தமிழகத்தை பொறுத்தவரையில் டெல்டா பாசனம் மூலம், 16.5 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. பவானிசாகர் அணை மூலம் ஈரோடு, கரூர், திருப்பூர் மாவட்டங்களில், 2.50 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. நெல், கரும்பு, மஞ்சள், மரவள்ளி, பயறு வகைகள் ஆண்டுக்கு இருபோகம் சாகுபடி செய்யப்படுகிறது. பாசனப் பகுதிகளில் மண் அமைப்புக்கு ஏற்றவாறு தழை, மணி, சாம்பல் சத்துகள் அடங்கிய யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ், டீ.ஏ.பி., மற்றும் சல்பேட் போன்ற உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.உர மானியத் திட்டத்தில் விவசாயி களுக்கு தேவையான உரத்தை, உர உற்பத்தியாளர் கள் வழங்க வேண்டும். உரத்தின் உற்பத்தி விலை அதிகரிக்கும் பட்சத் தில் கூடுதல் விலையையும் அரசு மானியமாக வழங்கி வந்தது. இதுவே, "டி கன்ட்ரோல்' முறை. "உர உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் கூடுதல் செலவை, அரசு மானியமாக வழங்க வேண்டிய தில்லை. கூடுதல் விலையை விவசாயிகளே கொடுத்து, உரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்' என்று நந்தன்

நீல்கனி தலைமை யிலான குழு, மத்திய அரசுக்கு பரிந்துரைத்துள்ளது.மத்திய அர” இதை ஏற்று,ஏப்ரல் 1ம் தேதி முதல் இத்திட்டத்தை அமல்படுத்தி யது. 2012 மார்ச், 31ம் தேதி வரை இம்முறை அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கொள்கையால் உர நிறுவனங்கள் தங்கள் இஷ்டம் போல் உரத்தின் விலையை உயர்த்த துவங்கிவிட்டன. 450 ரூபாய்க்கு விற்ற டீ.ஏ.பி., 782 ரூபாய், 185 ரூபாய்க்கு விற்ற சூப்பர் பாஸ்பேட், 280 ரூபாய், 225 ரூபாய்க்கு விற்ற பொட் டாஷ், 550 ரூபாய், 420 ரூபாய்க்கு விற்ற, 20:20 கலப்பு உரம், 740 ரூபாயாக உயர்ந்தது.உரங்களின் விலையை அடுத்த வாரம் மேலும் உயர்த்த, உர நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன. உரங்களின் விலை மேலும் பல மடங்கு உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஈரோடு தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் தளபதி கூறியதாவது:தமிழக விவசாயிகளுக்கு ஆண்டுக்கு, 1.50 லட்சம் டன் உரம் தேவைப்படுகிறது. சென்ற ஏப்ரல் மாதத்துக்கு முன் வரை உரத்தின் விலை அதிகரிக்கும் போது, கூடுதல் விலையை அரசு செலுத்தி வந்தது. புதிய மானியக் கொள்கையால், அர” அளித்து வந்த கூடுதல் விலையை நிறுத்தி விட்டது. சர்வதேச விலைக்கு ஏற்ப, பெட்ரோல் விலையை எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயிப்பது போல், உரங்களின் விலையை, உர நிறுவனங்கள் நாளுக்கு நாள் உயர்த்தி வருகின்றன. அடுத்த வாரத்தில், டீ.ஏ.பி., 900 ரூபாய், பொட்டாஷ் 700 ரூபாய் என உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. மழைக்காலம் ஆரம்பித்து, அனைத்து பகுதிகளிலும் சாகுபடி பணி மும்முரமாகத் துவங்கியுள்ள நேரத்தில், உரம் விலை உயர்ந்தால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுவர்.இதனால், விவசாயிகளுக்கு விவசாயத்தில் ஈடுபாடு குறைந்து, எதிர்காலத்தில் உணவு தானியங்களுக்கு பற்றாக்குறை ஏற்படும். இவ்வாறு தளபதி கூறினார்.

**கோதுமைக்கான அதிபட்ச ஆதரவு விலை அதிகரிக்க மத்திய அரசு முடிவு**

அக்டோபர் 07,2011,10:58



புதுடில்லி: கோதுமைக்கான அதிகபட்ச விலையை அதிகரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இது

குறித்து மத்திய விவசாயத்துறை அமைச்சர் சரத்பவார் கூறியுள்ளதாவது: தற்போது ராபி பருவத்தில் உற்பத்திய செய்யப்படும் கோதுமைக்கான அதிபட்ச ஆதரவு விலையை இன்னும் 10 அல்லது 15 நாட்களுக்கு அதிகரிக்கப்படுகிறது. அதன்படி வரும் 2011-2012- வர்த்தக ஆண்டு மத்திய பகுதியில் கோதுமை குவிண்டால் ஒன்று ரூ. 1, 170 ஆக இருக்கும். இது குறித்து பொருளாதாரா விவகாரங்களுக்கான அதிகாரபூர்வ அமைச்சரவை கமிட்டியின் ஒப்புதல் பெறப்படும் எனவும், இந்த காரீப் பருவத்தில் கோதுமை உற்பத்தி 87.10 லட்சம் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக சரத்பவார் கூறினார்.

**உணவு பணவீக்கம் அதிகரிப்பு**

அக்டோபர் 07,2011,12:44



புதுடில்லி: உணவு பண வீக்கம் அதிகரித்துள்ளது. கடந்த செப்டம்பர் 24-ம் தேதி வரையிலான காலங்களில் உணவு பணவீக்கம் 9.13 சதவீதத்திலிருந்து 9.41 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது குறித்து மத்திய நிதி அமைச்சர் பிரணாப்முகர்ஜி கூறுகையில், உணவுபணவீக்கம் குறித்து தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும், இது தொடர்பாக ரிசர்வ் வங்கியுடன் ஆலோசித்து வருவதாகவும் கூறினார். இதேபோன்று உணவு அல்லாதஇனங்களின் பணவீக்கம் குறைந்துள்ளது. கடந்த வாரம்12.89 சதவீதமாக இருந்து இந்த வார இறுதியில் உணவு அல்லாத பணவீக்கம்10.77 சதவீதமாக உள்ளது. கடந்த 2010-ம் ஆண்டு மார்ச் வரையில் உணவு பணவீக்கத்தை கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கியும் இதுவரை 12 முறை தனது விலை கொள்கையினை மாற்றியமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது

**சமையல் எண்ணெய், பழங்கள் இறக்குதி அதிகரிப்பு**

அக்டோபர் 07,2011,16:32



புதுடில்லி: உணவு பணவீக்கம் இரட்டை இலக்கை எட்டியுள்ளதால், சமையல் எண்ணெய், பழங்களின் இறக்குமதி அதிகரித்துள்ளது. உணவு பணவீக்கம் 9.13 சதவீதத்திலிருந்து 9.41 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்தாண்டு ஏப்ரல் தொடங்கி ஜூலை மாதம் வரை இறக்குமதி விகிதம் 37.6 சதவீதம் உள்ளது. இதனால் மலேஷியா- இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலிருந்து பழங்கள், சமையல் எண்ணெய் ஆகியவற்றின் மீதான இறக்குமதி அதிகரித்துள்ளது. எனவே இந்தாண்டு மொத்த இறக்குமதி ரூ. 31 ஆயிரத்து 692 கோடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது கடந்தாண்டு ரூ. 23 ஆயிரத்து 039 கோடியாகும். உணவு பணவீக்கம் குறித்து கவலை தெரிவித்துள்ள மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி,தொடர்ந்து ரிசர்வ் வங்கியிடம் ஆலோசித்துவருவதாக கூறினார்.

**பயிர் காப்பீட்டு இன்சூரன்ஸ் வழங்க வருவாய் அளவில் நிலங்கள் பிரிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2011,22:53 IST

ராமநாதபுரம் : பயிர் காப்பீட்டு இன்சூரன்ஸ் வழங்குவதற்கு ஏதுவாக, நிலங்கள் வருவாய் அளவில் பிரிக்கப்பட உள்ளன. தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் பயிர் காப்பீடு செய்துள்ள விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டு வருகிறது. பயிர்கள் சேதம் ஏற்படுவதை வேளாண் துறை அதிகாரி, வி.ஏ.ஓ.,க்கள், கூட்டுறவு சங்க சார்பதிவாளர்கள், கள அலுவலர்கள் அடங்கிய குழுவினர் கண்காணித்து, இழப்பீட்டுக்கு தகுந்த நிவாரணத்தை பெற அரசுக்கு பரிந்துரை செய்கின்றனர். இந்த பரிந்துரையின்போது, நிலங்கள் பிர்கா அளவில் பிரிக்கப்படுவதால், ஒரு சிலரின் நிலங்கள் இரண்டு பிர்க்காவுக்குள் அடங்குகின்றன. இதனால் அவர்கள் பயிர் இன்சூரன்ஸ் பெற முடியவில்லை. ஒரே கிராமத்தில் ஒருவருக்கு கிடைத்து, மற்றவருக்கு கிடைக்காத நிலையால் விவசாயிகளுக்கும், அதிகாரிகளுக்கும் இடையே பிரச்னை

ஏற்படுகிறது. இந்நிலையை தடுக்க, பயிர்காப்பீட்டு இன்சூரன்ஸ் செய்துள்ள பகுதிகள், வருவாய் கிராம அளவில் பிரிக்க கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

**பொன்னாய் நெல் குவிக்க பொடிநெல் சாகுபடி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2011,00:00 IST

மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் சிவகங்கை மாவட்ட விவசாயிகள் எடீடி 36, எடீடி 45, எஸ்டி16 (பெருவெட்டு ரக நெல்), வெள்ளைப் பொன்னி மற்றும் ஜே-13 நெல் ரகங்களைத் தேர்ந்தெடுத்து திருந்திய நெல் சாகுபடி முறைகளை கடைபிடித்து சாகுபடி செய்யலாம். இதில் விவசாயிகள் நல்ல அனுபவமும், திறமையும் பெற்றுள்ளனர். இந்த முயற்சியில் ஏக்கர் சாகுபடி செலவு ரூ.11,000 - 12,000 வரை ஆகும். ஏக்கர் மகசூல் 32 மூடை வரை கிட்டும். ஒரு மூடை விலை ரூ.650 வரை கிடைக்கும். ஏக்கரில் மொத்த வரவு ரூ.20,800 கிடைக்கும். செலவு ரூ.11,000 போக லாபம் ரூ.9,800லிருந்து ரூ.10,000 வரை கிடைக்கும். விவசாயிகள் பாடுபட்டு உழைத்து பலன் அடைய வேண்டும்.

தற்போது ராமநாதபுரம், விருதுநகர் மாவட்ட விவசாயிகள் முதல் போக நெல் சாகுபடியை செய்ய ஆர்வமாக உள்ளனர். இம்மாவட்டங்களில் விவசாயிகள் நம்பிக்கையுடன் பொடியில் நேரிடை விதைப்பு செய்ய தங்களை தயார் செய்துகொண்டு இருக்கின்றனர். இங்கு மண்ணின் தன்மை மணல் சார்ந்த இளக்கமானதாக இருக்கும். விவசாயிகள் டிராக்டர் மற்றும் டில்லர் கருவி கொண்டு நிலத்தை உழுது புழுதியாக்கி விடுகின்றனர். புழுதியை அப்படியே காயவைத்துள்ளனர். இது சமயம் அடிக்கும் வெயிலானது மூன்று பங்கு புழுதியை ஒரு பங்காக சுண்டவிடுகின்றது. இதனால் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த மண் நல்ல வளத்தைப் பெற்று விடுகின்றது. இந்நிலை வந்தவுடன் விவசாயிகள் மக்கிய இயற்கை உரத்தோடு பத்து பொட்டலங்கள் நுண்ணுயிர் உரத்தை கலந்து நிலத்திற்கு இடலாம். உடனே மழை வரும். மழை ஈரத்தில் ஊறப்போடாத நெல் விதைகளை நேரிடை விதைப்பு செய்து விதை சீராக முளைக்க நிலத்தின் மேல் பரம்படிக்க வேண்டும். நிச்சயமாக இந்த சீசனில் விவசாயிகளை மகிழ்விக்க மழை பெய்யும். விதை விதைத்த 15-ம் நாள் மேலுரமாக 25 கிலோ டிஏபி, 15 கிலோ யூரியா (இம்முறை சாகுபடியில் பலமுறை நிலம் உழப்படுவதால் களைத் தொந்தரவு அதிகம் இருக்காது) இடவேண்டும். விதை விதைத்த 20-ம் நாள் ஒரு கைக்களை லேசாக எடுக்கவும். களையெடுத்தபின் மழை வரும். மழை நன்கு பெய்த சமயம் இரண்டாவது மேலுரமாக யூரியா 10 கிலோ, பொட்டாஷ் 10 கிலோ இடலாம். புழுதிக்கால் சாகுபடியில் ஒரு சிறிய பிரச்னை உண்டு. அதாவது பயிரை லேசாக பூஞ்சாள நோய் தாக்கும். குறிப்பாக பயிரினை குலைநோய் தாக்கும் வாய்ப்பு உண்டு. உடனே விவசாய இலாகா அதிகாரிகளது ஒத்துழைப்போடு நோயினை கட்டுப்படுத்த வேண்டும். பயிர் செழிப்பாக வளர்ந்து பூக்கள் பிடிக்கும். பயிர் பூத்து 25 முதல் 30 நாட்களில் அறுவடை கட்டம் தோன்றும். அப்போது

கதிரின் அடிபாகத்திலுள்ள 4, 5 மணிகள் முற்றிய நிலைக்கு வரும். இக்கட்டத்தில் நெல் அறுவடை செய்து சுமைகளை களத்து மேட்டிற்கு கொண்டு போகும்போது ஒரு மணி நெல் கூட கீழே கொட்டாது. இதனால் அதிக விளைச்சல் கிடைக்கும். இம்முறை சாகுபடிக்கு செலவு ரூ.8,000 - 9,000 வரை ஆகும். இம்முறை சாகுபடியில் விவசாயிகள் சாகுபடிக்கு குச்சி நெல், மட்டை ரக நெல், பெருவெட்டு ரக நெல் இவைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சாகுபடியில் ஏக்கரில் 25 மூடை மகசூல் கிடைக்கும். இம்முறை சாகுபடியில் விவசாயிகள் சுலபமாக ஏக்கரில் ரூ.8,000 வரை லாபம் எடுக்க முடியும். துணிவே துணை என்ற நம்பிக்கையோடு விவசாயிகள் சாகுபடி செய்தால் நல்ல பலன் காண முடியும்.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2011,00:00 IST

**த.வே.ப.க. நெல் ஏ.டி.டீ.49**: இந்த புதிய நெல்ரகம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடந்தமாதம் வெளியிட்டுள்ளது. இதன் சிறப்பியல்புகள்: மத்திய சன்ன வெள்ளை அரிசி. 1000 மணிகளின் எடை 14 கிராம்; முழு அரிசி காணும் திறன் 71.3 சதம்; ஒட்டாத உதிரியான சுவையான சாதம். குலைநோய், துங்ரோ நோய், இலையுறை கருகல், இலையுறை அழுகல் நோய்க்கு செயற்கை நோய்க்காரணிகளின் தாக்கத்தில் மித எதிர்ப்புசக்தி; வயல்வெளி ஆய்வில் செம்புள்ளி நோய், இலை மடக்குப்புழுவிற்கு நடுத்தர தாங்கும் திறன்.
இந்த புதிய நெல் ரகத்தின் வயது 130-137 நாட்கள்; மகசூல் 5173 கிலோ/எக்டர். (பிட்டி 5204ஐவிட 10.5 சதம் கூடுதல் விளைச்சல்; அதிகபட்ச மகசூலாக எக்டருக்கு 10,250 கிலோ தானியம் கொடுக்கவல்லது. பருவம்: பின்சம்பா, தாளடி பட்டம்; உருவாக்கம்: சி.ஆர்.1009/ ஜீரக சம்பா ரகங்களின் இனச்சேர்க்கை; பயிரிட உகந்த மாவட்டங்கள்: தமிழகத்தில் விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, நீலகிரி மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங் களில் பயிரிட ஏற்றது. **மேலும் விபரங்களுக்கு**: இயக்குனர், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம், ஆடுதுறை, போன்: 0435-247 2108.

**த.வே.ப.க.வீரிய ஒட்டு நெல் கோ.4**: - இந்த புதிய வீரிய ஒட்டு நெல் எக்டருக்கு 7348 கிலோ மகசூல் கொடுக்கக்கூடியது. இது 27பி11ஐவிட 14 சதம் கூடுதல் மகசூலாகும். அதிகபட்ச மகசூலாக எக்டருக்கு 11250 கிலோ தானியம் கொடுக்கவல்லது. இதன் வயது 130-135 நாட்கள். உருவாக்கம்: கோ.எம்.எஸ்.23ஏ/சிபி174 ஆர் ஆகியவற்றை பெற்றோராகக் கொண்ட வீரிய ஒட்டு ரகமாகும். சாகுபடி செய்ய உகந்த பருவம்: பின்சம்பா, தாளடி. பயிரிட உகந்த மாவட்டங்கள்: தமிழகத்தில் விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, நீலகிரி மாவட்டங்களைத் தவிர பிற

மாவட்டங்களில் பயிரிட ஏற்றது.

**சிறப்பியல்புகள்:** மத்தியகால மத்திய சன்ன அரிசி கொண்ட வீரிய ஒட்டு; மிதமான அமைலோஸ் மாவுப்பொருள், ஒட்டாத உதிரியான சுவையான சாதம்; குலைநோய், பழுப்பு புள்ளி நோய் ஆகியவற்றிற்கு எதிர்ப்புத்திறனும் பச்சை தத்துப்பூச்சி, வெண்முதுகு தத்துப்பூச்சி, இலையுறை அழுகல், இலையுறை கருகல், துங்ரோ ஆகிய நோய்களுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது.

**மேலும் விபரங்களுக்கு:** பேராசிரியர் மற்றும் தலைவர், நெல்துறை பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003.

**போன்:** 0422-247 4967.

அனுபவ விவசாயியின் கைவண்ணத்தில் உருவான விவசாயக்கருவிகள் வாய்க்கால் எடுக்கும் கருவி, இரட்டை வரிசை கோனோவீடர், அகலம் குறைந்த கேஜ்வீல் ஆகியவை விலை குறைவாகவும், அதிக பலனும் கொடுக்கக் கூடியவை.

இக்கருவிகளில் நுட்பமான மாற்றங்களைச் செய்து அதன் செயல்பாடுகளை மேம்படுத்தி, கூடுதல் பயன்பாட்டிற்கு உட்படுத்தி இருப்பவர் வேளாண்மைச் செம்மல் விருது பெற்றுள்ள விவசாயி துரைசாமி, கரூர் மாவட்டம், குமாரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர். **தொடர்புக்கு:** 99653 45400.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**உணவு பதப்படுத்துதலில் மதுரை பெண்மணி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2011,00:00 IST



அரிசியைவிட சிறுதானியங்களில் 10 முதல் 12 கிராம் வரையில் புரதச் சத்தும் அதிகளவில் நார்ச்சத்தும், வைட்டமின் மற்றும் தாது உப்புக்கள் அதிகளவில் உள்ளன. சிறிதுகாலமாக சிறுதானியங்கள் பயிர் செய்யப்படும் நிலப்பரப்பு குறைந்ததோடு அல்லாமல் அதை உபயோகிப்பவர்களும் குறைந்துவிட்டதால் சத்துக்கள் குறிப்பாக நார்ச்சத்து பற்றாக்குறையால் சர்க்கரை நோய் மற்றும் உடல் பருமன் போன்ற நோய்களால் பெரும் பாலானோர் அவதிப்

படுகிறார்கள். இவ்வகை நோய்களால் அவதிப் படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.
தற்சமயம் மக்கள் சிறுதானியங்களை உணவில் சேர்த்துக்கொள்ள ஆரம்பித்து உள்ளார்கள். சரிவிகித உணவு பரிந்துரைக்கப்படும் இந்நாளில் சிறுதானியங்களை நமது அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.
சிறு தானியங்களான வரகு, சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, குதிரைவாலி, மக்காச்சோளம், சோயா போன்றவற்றைக் கொண்டு உடனடி உணவு வகைகளை தயார் செய்கிறேன்.
சிறுதானியங்களில் அதிக அளவு நார்ச்சத்தும் நம் உடலுக்கு தேவையான புரதம், வைட்டமின், தாது உப்புக்கள் உள்ளதால் இயற்கையாகவே உடல் எடையையும் கொழுப்பையும் குறைக்கும். எனவே நம் அன்றாட உணவில் சிறுதானிய உணவு வகைகளை எடுத்துக் கொண்டால் இதயநோய், நீரிழிவு, கொழுப்புச் சத்து, புற்றுநோய் போன்ற நோய்களை கட்டுப்படுத்தலாம்.
எங்களது உணவு வகைகளாவன: சிறுதானிய புட்டுமாவு, அடை மாவு, முளை கட்டிய சத்துமாவு, களி மாவு, முறுக்கு மாவு, கொழுக்கட்டை மாவு, கீரைகளிலான சாதப்பொடி, ரொட்டி மாவு, கீரை மற்றும் சிறுதானியங்களினால் ஆன பிஸ்கட் வகைகளை கொடுத்து வருகிறேன். **தொடர்புக்கு**: பாலசித்ரா, பொன்மேனி, மதுரை-16. 95664 77674.-**கே.சத்யபிரபா, உடுமலை.**

**ரூ.19 லட்சத்துக்கு காய்கறி விற்பனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2011,03:10 IST

ஓசூர்: ஓசூர் உழவர்சந்தையில் ஆயுதபூஜையொட்டி ஓரே நாளில் 19 லட்சம் மதிப்புள்ள 110 டன் காய்கறிகள் விற்பனையாகி உள்ளது.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, ஓசூர், தேன்கனிக்கோட்டை, காவேரிப்பட்டிணம் ஆகிய இடங்களில் மொத்தம் ஐந்து உழவர்சந்தைகள் செயல்படுகிறது. ஓசூர் உழவர்சந்தையில் தமிழகத்தில் திருப்பூருக்கு அடுத்தப்படியாக அதிகளவு காய்கறிகள் விற்பனைக்கு வருகிறது. இங்கு விவசாயிகள், நுகர்வோர் வருகை அதிரித்ததால் தற்போது ஓசூர் ஆவலப்பள்ளியில் இரண்டாவது உழவர்சந்தை துவங்கப்பட்டுள்ளது.
ஓசூர் தாலுககாவில் அனைத்து வகை காய்கறிகள், பழங்கள், பூக்கள் அதிகளவில் உற்பத்தியாகிறது. இதனால், ஓசூர், பாகலூர், பேரிகை, உத்தனப்பள்ளி, சூளகிரி, ராயக்கோட்டை, பேளகொண்டபப்பள்ளி உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் தினசரி விளைநிலங்களில் உற்பத்தியாகும் காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களை ஓசூர் உழவர்சந்தைக்கு கொண்டு வருகின்றனர்.
இதனால், ஓசூர் உழவர்சந்தையில் சாதாரணமாக தினசரி விவசாயிகள் 100 டன்னுக்கு மேல் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். நேற்று ஆயுதபூஜை என்பதால்,

உழவர்சந்தையில் வழக்கத்திற்கு மாறாக காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்கள் வாங்குவதற்கு பொதுமக்கள் கூட்டம் அலைமோதியது.
நேற்று ஒரே நாளில் 19 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 110 டன் காய்கறிகள் விற்பனையானது. இவற்றில் காய்கறிகள் மட்டும் 15 லட்சம் ரூபாய்க்கும், பழங்கள் ஒரு லட்சத்து 53 ஆயிரத்து 750 ரூபாய்க்கும், பூக்கள் 2 லட்சத்து 12 ஆயிரத்து 450 ரூபாய்க்கும் விற்பனையானது.
ஆயுத பூஜையில் முக்கிய பூஜை பொருளாக பயன்படுத்தப்படும் பூசணிக்காய் 3 ஆயிரத்து 125 கிலோ விற்பனைக்கு வந்தது. ஒரு கிலோ பூசணிக்காய் 14 ரூபாய்க்கு விற்பனையானது. வாழைப்பழம் ஆயிரத்து 325 கிலோவும், பப்பாளி பழம் 1625 கிலோவும், எலுமிச்சை பழம் 965 கிலோவும் விற்பனைக்கு வந்தது. காய்கறிகளில் கேரட் 3 ஆயிரத்து 425 கிலோவும், பீன்ஸ் 3 ஆயிரத்து 225 கிலோவும், காலிஃபிளவர் 3 ஆயிரத்து 025 கிலோவும் விற்பனைக்கு வந்தது. அதே போல் நாட்டு தக்காளி 2 ஆயிரத்து 925 கிலோவும், ஹை பீரிட் தக்காளி 4 ஆயிரத்து 125 கிலோ வந்துள்ளது. பூக்களில் சாமந்தி பூ ஆயிரத்து 235 கிலோவும், செண்டுமில்லி 240 கிலோவும், பட்டன் ரோஸ் 125 கிலோவும் விற்பனைக்கு வந்தது. இதுகுறித்து உழவர்சந்தை அதிகாரி மேகநாதன் கூறுகையில், ""ஓசூர் பகுதியில் தற்போது காய்கறிகள் உற்பத்தி குறைவு என்றாலும், நேற்று ஆயுதபூஜை என்பதால் விவசாயிகள் அதிகளவு காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். 287 விவசாயிகள் நேற்று காய்கறிகள் விற்பனை செய்ய கொண்டு வந்தனர். 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நுகர்வோர் காய்றிகள் வாங்குவதற்கு உழவர்சந்தை வந்தனர், " என்றார்.
ஓசூரை போல் மாவட்டத்தில் உள்ள அனைத்து உழவர்சந்தைகளிலும் நேற்று ஆயுதபூஜை என்பதால் அதிகளவு காய்கறிகள் வரத்தும், விற்பனையும் நடந்தது. இவற்றில் ஓசூரில் அதிகப்பட்சமாக 19 லட்சம் ரூபாய்க்கு காய்கறிகள் விற்பனையாகி சாதனைப்படைக்கப்பட்டுள்ளது.

**தொடர் மின்தடையால் விவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2011,01:04 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் மின்தடையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.எல்.பி.பி., தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால்கள் ஆகியவற்றில், பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் நெல், வாழை, கரும்பு, மஞ்சள் போன்றவை பயிரிடப்பட்டுள்ளது. வாய்க்கால் பாசனம் ஒரு பக்கம் இருந்தாலும், கிணற்றுப் பாசனமும் அதிகளவில் நடக்கிறது. நவீன முறையில் பலரும் சொட்டு நீர்ப் பாசனத்துக்கு மாறியுள்ளனர்.சென்ற 2008 முதல் நிலவும் மின்தடையால் கோபி வட்டாரத்தில் விவசாயத்தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது, வெயில் கடுமையாக உள்ளதால் 24 மணி நேரமும் மின்மோட்டர் இயக்கினால் மட்டுமே, விவசாயத்துக்கு போதுமான தண்ணீர் கிடைக்கும். ஒரு டிரான்ஸ்ஃபார்மரில் 30 மோட்டார் மின் இணைப்பு உள்ளது. மின்மோட்டார் இயக்கும் போது 440 வோல்ட்டேஜ் தேவை. தற்போது 260 முதல் 270 வோல்ட்டேஜ் மட்டுமே தருகின்றனர். அடிக்கடி ஏற்படும் மின்தØயால் மின்மோட்டார் காயில், சொட்டு நீர் பாசன மோட்டார்கள் பழுதாகின்றன. மின்தடையால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.விவசாயிகள் கூறியதாவது:எல்.பி.பி., பாசனப்பகுதியில் நெல் நடவுப் பணி தீவிரமாக நடக்கிறது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் இரண்டாம் போகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு உழவு பணி தீவிரமாக நடக்கிறது. பாசனப்பகுதிகளில் கொப்பு வாய்க்காலில் கடை மடைக்கு சரியாக தண்ணீர் செல்லாது. இவ்வாறான நிலையில் கிணற்று நீரை பயன்படுத்தி உழவு செய்ய வேண்டும். நகர் பகுதியில் இரண்டு மணி நேரம் மின்தடை ஏற்படுகிறது. கிராமப்பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால், மின்மோட்டார் சரியாக இயக்க முடியவில்லை. உரத்தட்டுபாட்டில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, மின்தடை பெரிய பாதிப்பாக உள்ளது. விவசாயிகளுக்கு தேவையான மின்சாரத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பூ விற்பனை அமோகம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2011,02:13 IST

கோவை : ஆயுத பூஜையை முன்னிட்டு, கோவை பூ மார்க்கெட்டில் விற்பனை அதிகரித்துள்ளது.ஆயுத பூஜைக்கு பயன்படும் மஞ்சள் சாமந்தி பூக்கள், அதிகளவில் கோவை பூ மார்க்கெட்டில் குவிக்கப்பட்டுள்ளன. இன்றும், நாளையும் நடக்கும் ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை விழாவை முன்னிட்டு, பூக்களின் வரத்து மற்றும் விற்பனை பல மடங்கு அதிகரித்துள்ளது. கோவை சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ள இந்த பூக்கள், முழம் பத்து முதல் 15 ரூபாய் வரையிலான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. உதிரிப்பூக்கள், கிலோ கணக்கில் விற்பனை செய்யப்படுகின்றன. எலுமிச்சம் பழங்களின் விற்பனையும் அதிகரித்துள்ளது. ஒரு பழம் மூன்று ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரையில் விற்கப்படுகின்றன. ஆயுத பூஜையை முன்னிட்டு, கோவை குமரன் மார்க்கெட்டில் கரும்பு விற்பனையும் அதிகரித்துள்ளது. நேற்று ஒரே நாளில் மதுரையில் இருந்து 100 லாரிகளில் கரும்பு கொண்டு வரப்பட்டது. பத்து கரும்பு கொண்ட கட்டு, ரூ.160க்கு விற்பனையாவதாக, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**தேயிலை உற்பத்தி குறித்து உறுப்பினர்களுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2011,22:37 IST

கோத்தகிரி : கோத்தகிரியில் செயல்பட்டுவரும் நாக்குபெட்டா அறக்கட்டளையின் கீழ் 250 உறுப்பினர்கள் கொண்ட சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் சங்கம் தொடங்கப்பட்டுள்ளது. பதிமூன்று சுய உதவிக்குழுக்கள் ஒருங்கிணைந்து கூட்டுறவு முறையில் நடத்தப்படும் இந்த சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. "பெங்களூரு இந்தியன் இன்ஸ்டிடியூட் பிளான்டேஷன் மேனேஜ்மென்ட்' அமைப்பின் பேராசிரியர்கள் நரேந்திரன் மற்றும் வெங்கடேஸ்வரன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

இதில், விஞ்ஞான தொழில் நுட்பத்துடன் தேயிலை உற்பத்தி செய்வது, பசுந்தேயிலைக்கு நியாயமான விலை கிடைப்பதற்கான நடவடிக்கை, தேயிலைத் தூள் தயாரிப்பு மற்றும் விற்பனைக்கான வாய்ப்புகள் குறித்தும் பயிற்சியில் விளக்கம் அளிக்கப்பட்டது. அறக்கட்டளை நிர்வாகிகள் குட்டி, ரவி மற்றும் ஆலன் உட்பட உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். பொரங்காடு சீமெ நலசங்க பொதுசெயலரும், அறக்கட்டளை உறுப்பினருமான காரிகவுடர் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

**ஊட்டியில் ரோஜா கூட்டம் சுற்றுலா பயணிகள் வியப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2011,22:37 IST

ஊட்டி : ஊட்டியில் இரண்டாவது சீசன் களை கட்டியுள்ளது. ரோஜா பூங்காவில் ஆயிரக்கணக்கான ரோஜாக்கள் மலர்ந்துள்ளதால், அவற்றை கண்டு சுற்றுலா பயணிகள் வியந்து செல்கின்றனர்.

நீலகிரி மாவட்டம், ஊட்டியில் இரண்டாவது சீசன் களை கட்டியுள்ள நிலையில், சுற்றுலா மையங்கள் அனைத்தும் பொலிவுடன் தயார்படுத்தப்பட்டுள்ளன. தாவரவியல் பூங்காவில், ரோஜா பூங்கா, படகு இல்லம் உட்பட மாவட்டத்தின் அனைத்து சுற்றுலா மையங்களும் வண்ண மயமாக காட்சியளிக்கின்றன.

ஆயுத பூஜை விடுமுறையை கொண்டாட சுற்றுலா பயணிகள் ஊட்டியில் குவிந்துள்ளனர். இதனால், தாவரவியல் பூங்கா, படகு இல்லம், தொட்டபெட்டா மலை சிகரம், ரோஜா பூங்கா உள்ளிட்ட சுற்றுலா ஸ்தலங்கள் களை கட்டியுள்ளன.

இரண்டாவது சீசனுக்காக ஊட்டி ரோஜா பூங்காவில் ஆயிரக்கணக்கான ரோஜா மலர்கள் மலர்ந்துள்ளன. இதை காணும் சுற்றுலா பயணிகள் வியந்து செல்கின்றனர்.

**கிருஷ்ணராயபுரம் விவசாயிகள் ஆர்வம் மண்வள பாதிப்பை தடுக்க அவுரி செடி சாகுபடி அதிகம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2011,01:12 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராய புரம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் நெல்சாகுபடி செய்வதற்கு வசதியாக மண்வளம் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக இயற்கை உரம் தாவரமான அவுரி செடி வளர்ப்பு சாகுபடி அதிகரித்துள்ளது.கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளான கிருஷ்ணராயபுரம், கோவெகுளம், புதுப்பட்டி, கட்டளை, ரங்கநாதபுரம், மகாதானபுரம் ஆகி ய பகுதி விவசாய நிலங்களில் திருந்திய நெல் சாகுபடி செய்ய தீர்மானிக்கப்பட்டு, அதற்கான முதற்கட்ட பணிகளான மண் வளம் பாதுகாக்க இயற்கை உர தாவரமான அவுரி செடி வகை நிலங்களில் தெளிக்கப்பட்டு, அதனை நன்றாக வளர்ந்த பின், அடி உரமாக மண்ணுடன் உழவு செய்யப்படுகின்றது.

இதன்மூலம் நெல் சாகுபடி பயிருக்கு ரசாயனம் உரமான யூரியா தேவை அதிகமாக பயன்படுத்துவது தவிர்க்கப்படுவதுடன் இயற்கை உரமான அவுரி செடி மூலம் நிலத்துக்கு தேவையான தழைச்சத்து கிடைக்கின்றது. மேலும் இயற்கை உரமான அவுரி செடி மூலம் நிலத்துக்கு தேவையான தழைச்சத்து கிடைக்கின்றது.மேலும், இந்த இயற்கை விவசாயம் மூலம் நெல் மகசூல் சாகுபடி அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால் "கிருஷ்ணராயபுரம் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகமான விளைநிலங்களில் அவுரி செடி வளர்ப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது' என விவசாயிகள் தெரிவித்தனர்.

**கோழிக்கொண்டை "பூ' விலை உயர்வு மகிழ்ச்சியில் பெரம்பலூர் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2011,00:50 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள கீழக்கனவாய், ரெங்கநாதபுரம், டி.களத்தூர், நக்கசேலம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் 100 ஏக்கர் பரப்பளவில் கோழிக்கொண்டை மற்றும் சாமந்தி பூ சாகுபடி செய்துள்ளனர்.குறைந்தளவு தண்ணீர், சாகுபடி செலவு குறைவு, அதிக லாபம் என்பதால், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தற்போது, இந்த வகை பூக்களை சாகுபடி செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.கோழிக்கொண்டை பூவானது, சாகுபடி செய்யப்பட்ட குறைந்த காலத்தில் பூக்கத்தொடங்குகிறது. அதேபோல, சாமந்திப்பூவும் வறட்சியை தாங்கி பூத்து குலுங்குவதால், விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கிறது.கடந்த சில மாதங்களாக ஒரு கிலோ

கோழிக்கொண்டை மற்றும் சாமந்திப்பூ ரூ. 10க்கு விவசாயிகளிடமிருந்து, வியபாரிகள் கொள்முதல் செய்து வந்தனர். இதனால், விவசாயிகள் தங்களது வயல்களில் மலர்ந்த பூக்களை அறுவடை செய்யாமல் இருந்தனர்.

இந்நிலையில், சரஸ்வதி பூஜை மற்றும் ஆயுதப்பூஜை வரும் 5ம் தேதி கொண்டாடப்பட உள்ளதால், ஒரு கிலோ சாமந்தி மற்றும் கோழிக்கொண்டை பூ ரூ. 40க்கு விவசாயிகளிடமிருந்து, வியாபாரிகள் கொள்முதல் செய்து வருகின்றனர்.
இதனால், பூ சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்களது வயல்களில் பயிரிடப்பட்டுள்ள மலர்களை அறுவடை செய்து, பெரம்பலூர், திருச்சி உள்ளிட்ட பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். ஆயுதப்பூஜையை முன்னிட்டு பூக்களின் விலை உயர்ந்துள்ளதால் கோழிக்கொண்டை, சாமந்திப்பூ சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

---

தினகரன்

**மத்திய மண்ணியல் ஆராய்ச்சி நிலைய அலுவலர்கள் முல்லை பெரியாறில் அதிர்வலை ஆய்வு**
பதிவு செய்த நாள் : 10/7/2011 1:3:36



கூடலு£ர் : முல்லைபெரியாறு அணையின் உறுதித்தன்மையை அறிய புனேயைச் சேர்ந்த மத்திய மண்ணியல் ஆராய்ச்சி நிலைய அலுவலர்கள் 72 இடங்களில் அதிர்வலை சோதனை நடத்தி வருகின்றனர். 4 நாட்களுக்கு நடக்கிறது. முல்லை பெரியாறு அணைப்பிரச்னைக்கு தீர்வுகாண, ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ஆனந்த் தலைமையில் உச்சநீதிமன்றம் ஐவர் குழுவை

நியமித்துள்ளது. இக்குழுவினர் கேரள அரசின் வேண்டுகோளுக்கிணங்க அணை யின் உறுதித்தன்மை குறித்து பல்வேறு சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

தற்போது அணைப்பகுதியில் அதிர்வலை சோதனை (சோனிக்லாஜிங்), சாயச்சோதனை (டைடெஸ்ட்) நேற்று துவங்கியது. அதிர்வலை சோதனை என்பது அணையின் ஒருபுறம் சுத்தியலை கொண்டு அடித்து அதிர்வு ஏற்படுத்தி, மறுபுறம் நவீன கருவிகள் மூலம் அதிர்வலைகளை பதிவு செய்து பலத்தை கண்டறியும் வகையாகும்.

சாயச்சோதனை என்பது அணையின் ஒருபுறம் துளையிட்டு, அதனுள் சாயத்தை செலுத்தி, வெளியேறும் கசிவுநீர் மூலம் பலத்தை கண்டறியும் வகையாகும். கடந்த செப்.16ல் மத்திய மண்ணியல் ஆராய்ச்சி நிலைய அதிகாரி தேசாய் தலைமையிலான குழுவினர் அணையில் ஆய்வு செய்ய வேண்டிய இடங்கள் குறித்து தமிழக, கேரள அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

கடந்த 2 நாள் முன்பு புனேயை சேர்ந்த மத்திய மண்ணியல் ஆராய்ச்சி நிலைய முதுநிலை ஆராய்ச்சி அலுவலர் திரிபாதி தலைமையில் ஆராய்ச்சி அலுவலர்கள் வர்ஷிகர், சல்வன்கே, கொடாக்கே ஆகியோர் நேற்றுமுன்தினம் பெரியாறு அணை மத்திய பாகம் 650வது அடியில் நீர்மட்டத்திற்கு மேலே 10 அடி உயரத்தில், சுத்தியலால் அடித்து சோதனை நடத்தினர்.

அணையின் பின்புறத்தில் 72 இடங்களில் தொழில்நுட்ப கருவிகள் மூலம் அதிர்வின் தன்மை பதிவு செய்யப்பட்டது. இச்சோதனை இன்னும் 4 நாட்களுக்கு நடக்க உள்ளது. அணையின் அடிப்பகுதியில் படிந்துள்ள சேற்றின் அளவு குறித்து கடந்த 3ம் தேதி முதல் புனேவை சேர்ந்த மத்திய நீர்மின் ஆராய்ச்சி நிலைய முதன்மை ஆராய்ச்சியாளர் செல்வபாலன் தலைமையில் சோதனை நடந்து வருகிறது.

கேரள அரசின் அணைகள் பாதுகாப்பு குழு தலைவர் பரமேஸ்வரன் நாயர் கூறுகையில், ÔÔஅதிர்வலைச்சோதனை மூலம் அணைகளின் பலத்தை கண்டறியலாம். சுண்ணாம்பு, கருங்கல், கான்கிரீட் என பல வகை பொருட்களால் கட்டப்பட்டுள்ள பெரியாறு அணையில் அதிர்வலை சோதனை நடந்து வருகிறது. சோதனைக்குப் பின்னர்தான் எதுவும் தெரிவிக்க முடியும்,ÕÕ என்றார்.